Registered as a Newspaper

பக்கங்கள் 12
விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 223

வெள்ளிக்கிழமை 07 ஜூலை 2023

ஆனி 22 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



கொக்குத்தொடுவாய் புதைகுழி

# தோண்டத்தோண்ட மனித எச்சங்கள்

## 12 உடல் எச்சங்கள் மீட்பு பெருமளவு பெண்களுடையவை

**முல்லைத்தீவு, ஜூலை 7**

**கொக்குத்தொடுவாயில் மனித எச்சங்கள் அவதானிக்கப்பட்ட இடத்தில், நேற்றையதினம் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டபோது, தோண்டத்தோண்ட உடைகளும் மனித எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளன.** »10

அகழ்வுப் பணிகள் தொடர்பில்

## முல்லை. நீதிமன்றத்தில் 13 ஆம் திகதி பரிசீலனை

முல்லைத்தீவு, ஜூலை 7

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வின், அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பான பரிசீலனை »10

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி

## உண்மையை மறைக்க புலனாய்வாளர்கள் சதி

சுமந்திரன் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜூலை 7

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வின்போது புலனாய்வாளர்களின் தலையீடு அதிகரித்துள்ளது. உண்மைகளை »10

## மனிதப்புதைகுழிகள் மீதே முகாம்களில் விகாரைகள்

சந்தேகிக்கிறார் ரவிகரன்

முல்லைத்தீவு, ஜூலை 7

இராணுவ முகாம்களில் மிகப்பெரும் விகாரைகள் அமைக்கப்பட்டுள்ள பகுதிகளின் கீழ் மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என்று வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் சந்தேகம் வெளியிட்டுள்ளார். »10

## மனிதப் புதைகுழியின் பின்னணி என்ன?

வெளிப்படுத்த வலியுறுத்தி முல்லைத்தீவில் கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, ஜூலை 7

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாயில் நேற்றையதினம் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அந்தப் புதைகுழி »10

## லாப்ஸ் விலை குறைப்பு

கொழும்பு, ஜூலை 7

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரி »10

## பணவீக்கம் வீழ்ச்சி: வட்டிவீதம் குறைப்பு

கொழும்பு, ஜூலை 7

அண்மையகாலங்களில் பணவீக்கத்தில் மிகவேகமான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டதன் »10

## டொலர் இருப்பு 3.5 பில்லியன்!

கொழும்பு, ஜூலை 7

நாட்டில் தற்போது 3.5 பில்லியன் டொலர் கையிருப்பில் உள்ளது »11

## 7% பணவீக்கம் குறையும்!

கொழும்பு, ஜூலை 7

இலங்கையின் பணவீக்கம் 7 வீதமளவுக்குக் குறையும் என்று மத்திய வங்கியின் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். »10

மின் கட்டணம்

## சிவப்புப் பட்டியல் வந்தமைக்காக மின்சார நிலையத்தில் தாக்குதல்

ஒருவருக்குக் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

தமது வீட்டுக்கு சிவப்பு எச்சரிக்கைத் துண்டு (ரெட் நோட்டீஸ்) வந்தமைக்காக. »10

12இல் துணைவேந்தர் தெரிவு

## பேரவை உறுப்பினர்களுக்கு ‘அநாமதேய’ அழைப்புகள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவுக்கான விசேட பேரவை அமர்வு எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ள நிலையில், பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினர்களுக்கு அநாமதேயத் தொலை »10

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலீட்டாளர்களுக்கு ஏற்றால்போல் தொழிலாளர் சட்டம் மாற்றியமைப்பு

## எதிர்த்துக் குரல்கொடுப்போமென தொழிற்சங்கவாதி சுவஸ்திகா காட்டம்



யாழ்ப்பாணம், ஜூலை 7

தொழிலாளர் சட்டங்களை முதலீட்டாளர்களுக்கும் தொழில்தருனர்களுக்கும் (முதலாளிகள்) ஏற்றால்போல் மாற்றியமைக்க யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. இது தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் செயலாகும் - இவ்வாறு கொண்டுவரப்படும் சட்டவரைவுகளை நாம் எதிர்த்து தொழிலாளர் உரிமைகளை நிலைநிறுத்தவேண்டும் என தொழிற்சங்க வாதியும் சட்டத்தரணியுமான சுவஸ்திகா அருள்லிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினரால் 'நெருக்கடியான காலத்தில் மோசமான சட்டவரைவுகள்' எனும் அடிப்படையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்கேற்ற போது இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கருத்துரைத்ததாவது:

கடந்த ஒரு தசாப்த காலமாக தமக்கு ஏற்றவகையில் சட்டத்தை உருவாக்க வேண்டும் என தொழில்தருணர்கள் வலியுறுத்திவரும் நிலையில் தொழிலாளர் சட்டங்கள் மாற்றியமைக்கப்படும் யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. தொழிலாளர்கள் தொடர்பாக கொண்டுவருகின்ற சட்டவரைவுகளில் தொழிலாளிகளின் வேலை செய்யும் நேரம் கடுமையானதாக மாற்றப்பட்டுள்ளது. சட்டங்களின் அடிப்படையில் சுமார் 15 மணிநேரம் வரை நிர்ணயிக்கப்பட்ட கடமைநேரமாக மாறவுள்ளது.

அத்துடன் இலங்கைச் சட்டத்தின்படி ஒருவரைத் தொழில்தருநர் விரும்பியவாறு தொழிலிலிருந்து இடைநிறுத்த முடியாது. தொழில் நீதிமன்றம் சென்று பாதிக்கப்பட்டவர் நீதியைப் பெறமுடியும். ஆனால் புதிய சட்டவரைவில் தொழில் தருநர்கள் வேலையில் இருந்து நிறுத்த உரிமையைக் கோருகின்றது. ஆகையால் இங்கே தொழில் நிச்சயமின்மை தோற்றுவிக்கப்படுகின்றது.

இவற்றால் பணியிட ஆரோக்கியம், பாதுகாப்பு, இழப்பீடு போன்றவை தொழிலாளிகளுக்கு கேள்விக்குறியாகுகின்றன. தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுவதுடன் தொழிலாளரை ஒடுக்கும் ஒன்றாகவே இது காணப்படுகிறது. ஆகவே இவற்றை சட்டவரைவாக உள்ளபோதே நாம் அதனை எதிர்த்து குரல் கொடுத்து தொழிலாளர் உரிமையைப் பாதுகாக்க வேண்டும் - என்றார். (ச-125)

## முல்லை மாவட்டச் செயலராக உமாமகேஸ்வரன் நியமனம்



முல்லைத்தீவு, ஜூலை 7

முல்லைத்தீவு மாவட்டச் செயலராக வடக்கு மாகாணசபையின் கல்வி அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய அருளானந்தம் உமாமகேஸ்வரன் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக்கடிதம் இன்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் பிரதமரால் வழங்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலராகக் கடமையாற்றிய க.விமலநாதன் ஓய்வுபெற்றுச் சென்றமையால் நிலவிய வெற்றிடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியான அருளானந்தம் உமாமகேஸ்வரன் வெருகல், குச்சவெளி ஆகிய பிரதேசங்களின் பிரதேச செயலாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் பணிப்பாளர், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் உள்ளிட்ட பதவிகளில் கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-125)

## உதயநிதி - செந்தில் தமிழகத்தில் சந்திப்பு

இந்தியா, ஜூலை 7

தமிழகத்தின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்ராலினை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். இலங்கையின் பொருளாதாரம் மற்றும் திட்டங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடினர்.

இரு தரப்பு உறவு பல நூற்றாண்டுகளாகத் தொடர்கிறது. தமிழ் நாட்டின் ஆதரவு இலங்கை மக்களுக்கு எப்போதும் அவசியம் என செந்தில்தொண்டமான் உதயநிதிக்கு சுட்டிக்காட்டினார். (ச-ரி3-22)



## நாடு ஏன் வங்குரோத்து?

## ஆராயும் குழுவின் தலைவராக மொட்டுவின் செயலர் நியமனம்

கொழும்பு, ஜூலை 7

நாட்டின் நிதி வங்குரோத்து நிலை குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட நாடாளுமன்றக் குழுவின் தலைவராக பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்துள்ளார்.

காரியவசத்தின் நியமனத்துக்கு எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். நாட்டின் திவால் நிலைக்கான காரணத்தை ஆராய ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரைப் நியமித்தமையை நம்ப முடியாது என்றும் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கிரியெல்லவின் இந்தக் கருத்து தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பிரிய தர்ஷன யாப்பா தனது கவலையை வெளியிட்டதுடன், இலங்கையின் இன்றைய நிலைக்கு அனைத்து அரசாங்கங்களும் பொறுப்பு எனத் தெரிவித்துள்ளார். (ஒ-இ)

## தொழிலாளியின் கனவைச் சிதைக்கும் பாஸிச ஆட்சி ஒழிக்கப்படவேண்டும்

### அனைத்து பல்கலை ஆசிரியர் சம்மேளன உபதலைவர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 7

மக்களின் உழைப்பை உறிஞ்சும் வகையில் புதிய சட்டவரைவுகளை உருவாக்கி பாஸிச ஆட்சியை நோக்கி இலங்கை நகர்ந்து கொண்டிருக்கிறது. ஒரு தொழிலாளியின் கனவைச் சிதைக்கும் இந்த மோசமான புதிய சட்டவரைவுகளை நாம் ஒழிக்கவேண்டும் என அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனத்தின் உபதலைவர் கலாநிதி அகிலன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கையின் பொருளாதாரம் 7.8 விகிதத்தால் சுருங்கியுள்ளது. பொதுமக்கள் உணவைக் கொள்வனவு செய்யும் விலைவாசி 90 சதவிகிதமாக அதிகரித்துள்ள போதும் வருமானம் அதிகரிக்கவில்லை.

உலக உணவுத் திட்ட அறிக்கைகளின்படி, இலங்கையில் நாள்கூலி செய்பவர்களின் வருமானம் 50 வீதத்தால் குறைவடைந்துள்ளது. அவர்கள் வருமானத்தின் நான்கில் ஒரு பகுதியை உணவுக்காகச் செலவிடுகின்றனர்.

தற்போது அரசாங்கம் ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றில் கைவைக்கவுள்ளது.

உழைக்கும் மக்களின் ஓய்வு வருமானத்தின் வட்டி விகிதத்தை அடுத்த 10 முதல் 16 வருடத்துக்கு குறைக்கப் போகின்றார்கள்.

உள்நாட்டுக் கடன்மறுசீரமைப்புக்கு முன்னர் ஒருவர் பத்து வருடங்கள் பணியாற்றி 30 லட்சம் ரூபாவைப் பெறுவாராயின் தற்பொழுது 21 லட்சமே அவரால் பெறமுடியும்.

ஒரு தொழிலாளியின் உழைப்பை உறிஞ்சி கனவைச் சிதைக்கும் இந்தச் சட்டவரைவுகள் அனைத்தும் மறைமுகமாகவும் நேரடியாகவும் ஒரு பாஸிச ஆட்சிக்கு வித்திடுகின்றது. இந்தச் சட்டவரைவுகளை அனைவரும் ஒன்றாக இணைந்து எதிர்க்கவேண்டும் - என்றார். (ச-125)

## ஜனாதிபதி ரணிலுக்கு கடன்பெறவே தெரியும்

### மரிக்கார் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 7

ரணில் விக்கிரமசிங்கவைப் பற்றி மொட்டுக் கட்சியினருக்கு எதுவும் தெரியாது. ஆனால் நாம் அவரை நன்கு அறிந்து வைத்துள்ளோம். அவருக்கு கடன்பெறவும், விற்கவும் மட்டுமே தெரியும் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மத்திய வங்கி பிணைமுறி கொள்ளையை மக்கள் முன் வெளிப்படுத்தியவர் தான் என்றே பந்துல குணவர்த்தன தேர்தலில் போட்டியிட்டார். ரணிலுக்குப் பிரதமர் பதவி வழங்க நாங்கள் பைத்தியங்கள் அல்லர் என்று ரோஹித அபேகுணவர்த்தன கூறினார். ரணில் சிறைக்குச் செல்லும் நாளில்தான் நான் உறங்குவேன் என்று கூறினார் மஹிந்தானந்த அளுத்கமகே. அவர்களே இப்போது கடன் மறுசீரமைப்பு சட்டத்தை ஆதரிக்கின்றனர். இவர்கள் எப்படி நாட்டைக் கட்டியெழுப்பப் போகின்றனர்? ரணிலைப் பற்றி மொட்டுக் கட்சியினருக்கு எதுவும் தெரியாது. நாங்கள் நன்கு அவரை பற்றி அறிந்துள்ளோம். கடன் பெறவும் விற்கவுமே தெரியும். அவ்வாறிருக்கையில் கடன் மறுசீரமைப்பு சட்டம் எவ்வளவு சிக்கலானது என்று புரிந்து கொள்ளவேண்டும் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘அஸ்வெசும’ வரும்வரையில் சமுர்த்தி உதவிகள் கிட்டும்

## சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 7**

**‘அஸ்வெசும’ பயனாளர் பட்டியல் பூர்த்தியாக்கப்படும்வரை சமுர்த்தி நிவாரணம் தொடர்ந்து வழங்கப்படும் என சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்கல் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அஸ்வெசும தொடர்பில் முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட போது கிராம அலுவலர்கள் பல திருகுதாளங்களில் ஈடுபட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 27 ஆயிரம் அரச ஊழியர்கள் பயனாளர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் முதல் சமுர்த்தி நிவாரணம் நிறுத்தப்பட்டு அஸ்வெசும நிவாரணம் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. தற்போது முறைப்பாடுகளுக்கான காலக்கெடு 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. விசாரணைகள் முடிவடைந்ததும் அஸ்வெசும நிவாரணம் வழங்கப்படும். அதுவரை 18 இலட்சம் சமுர்த்திப் பயனாளிகளுக்குரிய சமுர்த்தி நிவாரணம் தொடர்ந்து வழங்கப்படும். புதிய நடைமுறையின் கீழ் இடைக்கால கொடுப்பனவு 2 ஆயிரத்து 500 ரூபா, வறிய குடும்பங்களுக்கான கொடுப்பனவு 7 ஆயிரத்து 500 ரூபா, மிக வறிய குடும்பங்களுக்கான கொடுப்பனவு 15 ஆயிரம் ரூபா என்ற ரீதியில் வழங்கப்படும். சிறுநீரகப் பாதிப்புக்குள்ளானோர் மற்றும் தங்கி வாழ்வோருக்கான கொடுப்பனவுகளில் எதுவித மாற்றமும் ஏற்படாது - என்றார். (எ-6)

*வடக்கில்*

## தனியார் மருத்துவ நிறுவனங்கள் பதிவு செய்யப்படுவது கட்டாயம்!



யாழ்ப்பாணம், ஜூலை 7

தனியார்துறையிடம் இருந்து தரமான மருத்துவ சேவை கிடைப்பதை உறுதி செய்வதற்காக மருத்துவத்துறை சார்ந்த அனைத்துத் தனியார் நிறுவனங்களும், தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல்சபையில் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும்சபைக் கூட்டம் வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

தனியார் சுகாதாரசேவைகள் ஒழுங்குபடுத்தும் சபையின் செயலாளர் மருத்துவக் கலாநிதி திலீப் லியனகேயும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

வடமாகாணத்தில் தனியார் சுகாதாரசேவைகள் ஒழுங்குபடுத்தும்சபையில் பதிவு செய்யப்படாத ஒரு சில நிறுவனங்கள் உள்ளன என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அவர்கள் உடனடியாகப் பதிவுகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தப் பதிவுகளை (www.phsrc.lk) இணையத்தளத்தின் ஊடாக மேற்கொள்ள முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

## யாழ். சந்தைகளில் முட்டை அதிக விலையில் விற்பனை

### நுகர்வோர் விசனம்



யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ். குடாநாட்டு வர்த்தக நிலையங்களில் கோழி முட்டைகள் அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன என நுகர்வோரால் விசனம் தெரிவிக்கப்படுகிறது. யாழ். குடாநாட்டுச் சந்தைகளில் கடந்த வாரத்தில் 55 ரூபாவாக விற்கப்பட்ட கோழிமுட்டை தற்போது 58 ரூபாவாக அதிகரித்துள்ளது.

அதனால் முட்டைகளைக் கொள்வனவு செய்வதில் பாதிப்பை எதிர்நோக்க நேரிடுகிறது என நுகர்வோர் சுட்டிக்காட்டினர். (ச-17)



## பப்பாசி விலை; திடீர் அதிகரிப்பு

யாழ்.குடாநாட்டில் பப்பாசிப் பழங்களின் விலை சடுதியாக அதிகரித்துள்ளன என நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது. சந்தைகளில் கிலோ 80 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட பப்பாசிப் பழங்கள் தற்போது கிலோ 120 ரூபாவாக அதிகரித்துள்ளது.

தற்போதைய கடும் வரட்சி, வெப்பத்தால் பப்பாசி மரங்களில் ஒருவித பூஞ்சை நோய் பரவி வருவதால் பப்பாசிப் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் பப்பாசிச் செய்கையை கைவிடும் நிலைமையும் உருவாகுகின்றது எனச் செய்கையாளர்களால் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை இங்கிருந்து பப்பாசிப் பழங்கள் கூடுதலாக தெற்கே ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

# மக்கள் குடியிருப்புக்குள் முழங்காவிலில் மதுசாலை

### நீதிமன்றால் இடைக்காலத் தடை

கிளிநொச்சி, முழங்காவில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் அமைக்கப்பட்ட மதுபானசாலைக்கு இடைக்கால தடையுத்தரவை கிளிநொச்சி நீதிமன்று பிறப்பித்துள்ளது.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட முழங்காவில் பிரதேசத்தில் ஆலயம், பாடசாலை, விளையாட்டு மைதானம் என மக்கள் குடியிருப்பு மையப்பகுதியில் மதுபான சாலை அமைக்கப்பட்டமைக்கு எதிராக பிரதேச பொது அமைப்பினர் மற்றும் கிராமமக்கள் எதிர்ப்பு வெளியிட்டனர்.

அதற்கமைய குறித்த மதுபானசாலையால் பொதுத் தொல்லை ஏற்படுவதாகத் தெரிவித்து பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று வியாழக்கிழமை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, எதிர்வரும் 20 ஆம் திகதிவரை குறித்த மதுபான சாலை இயங்குவதற்கு இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பித்தது நீதிமன்று. முறைப்பாட்டாளர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி எஸ்.விஜயராணி ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். (ச-113)




**நெற்றிக்கண் திறந்தாலும் குற்றம் குற்றம் தான். அதை மாதிரி ஒண்டுமே தெரியாம இருக்கிறவையை தேவையில்லாமல் குற்றவாளியாக்கிறதும் குற்றம்தான். கிட்டடியில சமயம் சார்ந்த மாநாடு ஒண்டுக்கு ஆளுநர் போகாததால, எல்லாரும் அரை மணித்தியாலம் 'வெய்ட்' பண்ணினவை எண்டு பட்சி அண்டைக்கொருக்கா சொல்லியிருந்ததெல்லோ. ஆனால் அதுக்குப் பிறகுதான் சில உண்மையள் ஆதாரத்தோட தெரிய வந்திருக்கு. அதால முதல் சொன்ன தகவலில இருக்கிற பிழையளைத் திருத்தி, சரியானதைச் சொல்லவேண்டிய கடப்பாடு பட்சிக்கு இருக்கு. சரி, இனி விசயத்துக்கு வருவம்.**

**அப்பிடி ஒரு நிகழ்வு நடக்கப்போறதைப் பற்றியும், ஆளுநரை விருந்தினராக் கலந்து கொள்ளச் சொல்லியும் ஒரு மாசத்துக்கு முதல் ஆளுநர் அலுவலகத்துக்கு கடிதம் ஒண்டு வந்திருக்குது. அண்டைக்கு வேற நிகழ்ச்சியள் இருந்ததாலயும், இதில கலந்துகொள்ள ஏலாது எண்டதாலயும், அந்த நிகழ்வு பற்றின சரியான விவரங்கள் அந்தக் கடிதத்தில இல்லையெண்டதாலையும் ஆளுநர் அலுவலகம் அந்தக் கடிதத்துக்கு எந்தப் பதிலும் போடேலை. விழாவை ஏற்பாடு செய்தவையும் அவா விருந்தினரா வருவாவோ இல்லையோ எண்டுகூட போனிலையோ இல்லாட்டி நேரிலையோ வந்து உறுதிப்படுத்தவும் இல்லையாம். அவ்வளவு ஏன், விழாவின்ர அழைப்பிதழ் கூட ஆளுநருக்கு குடுபடேலை. பொதுவா ஒரு விதானையாரை விருந்தினரா அழைக்கிறதெண்டா கூட, அவரிட்டப் போய், ‘நேரமிருக்கோ? வருவீங்களோ?’ எண்டதை உறுதிப்படுத்திப் போட்டுத்தான் அழைப்பிதழில பேரைப் போடுவம். இந்த நிலைமையில வடக்கின்ர அதியுச்ச அதிகாரத்தில இருக்கிற ஒருத்தரை, ஒரு நிகழ்வுக்கு அழைக்கிறதுக்கு சில நடைமுறையள் இருக்கு. பொத்தாம் பொதுவா 'எங்கட நிகழ்வில பிரதம விருந்தினரா கலந்து கொள்ளுங்கோ' எண்டு ஒரு கடிதத்தை அனுப்பிப் போட்டு, பதில் வராத நிலைமையில அவா வருவா எண்டு என்னெண்டு விழாக்காரர் முடிவெடுத்தவை? கடிதத்துக்குப் பதில் வராம விடேக்கையே அவைக்கு அவா வரமாட்டா எண்டு தெரிஞ்சிருக்கத்தானே வேணும். அப்பிடி அவா வரமாட்டா எண்ட சந்தேகம் வந்ததும் உடன ஆளுநரை ஏதோ ஒருவழியில தொடர்பு கொண்டு, அதை உறுதிப்படுத்தி இருக்கவேணும். ஆனால் அப்பிடி எந்த வழியாலையும் ஆளுநர் வாறதை உறுதிப்படுத்தாமல், நிகழ்வுக்கு அவா வருவா எண்டு அறிவிச்சதும், அவா வந்துதான் தேசியக் கொடியை ஏத்துவா எண்டு சொல்லி, நிகழ்வுக்கு வந்தவையை கால்கடுக்க அரைமணித்தியாலம் காக்கவச்சதும் விழாக்காரரே தவிர, ஆளுநரில்லை எண்டதுதான் உண்மை. இப்பிடி ஒரு மொட்டைக் கடிதத்தைப் போட்டிட்டு அவைதான் பிரதமவிருந்தினர் எண்டு நாங்களே முடிவெடுக்கலாம் எண்டால், அமெரிக்க ஜனாதிபதியைக் கூட பிரதம விருந்தினர் எண்டு சொல்லிப் போட்டு, விழாவுக்கு வரேலை எண்டு அவரில குற்றம் சொல்லலாமோ? இல்லாட்டி அவர் வருவார், வருவார் எண்டு விழாவுக்கு வந்தவையின்ர காலை வாரலாமோ?**



\- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாலை காட்டு வைரவரில் இவ்வருடம் கடாய் வெட்டு ரத்து

யாழ்ப்பாணம், ஜூலை 7
பொன்னாலை காட்டுவைரவர் ஆலயத்தில் கடாய் வெட்டும் வேள்வி இந்த வருடம் நிறுத்தப்படுகின்றது என ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இந்த நிகழ்வு நிறுத்தப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பொன்னாலை காட்டுவைரவர் ஆலய கடாய் வெட்டு வேள்வி எதிர்வரும் சனிக்கிழமை நடத்த ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தநிலையில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளதால் கடாய் வெட்டும் வழிபாட்டை நிறுத்துமாறு பொதுமக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதற்கமைய இந்தவருடம் கடாய் வெட்டு நிறுத்தப்படுகிறது என தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (ச-ரி2 66)

# நிறுவனர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஜூலை 7
அளவெட்டி அருணாசலம் வித்தியாசாலையின் 113 ஆவது நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக அழகியல் மற்றும் முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் ச.கிருபாநந்தன் கலந்துகொள்ளவுள்ளார். (ச-ரி2-63)

# மாணவர்களுக்கு மனனப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 7
சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே சமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக்கழகத்தால் மனனப் போட்டி நடத்தப்படவுள்ளது.

பாலர் வகுப்பு தொடக்கம் தரம்-3 மாணவர்களுக்கு இந்த மனனப்போட்டி முன்னெடுக்கப்படவுள்ளது. 'நத்தார் படை', 'பொன்னார் மேனியனே' ஆகிய இரு திருமுறைகள் மனனப்போட்டியில் ஒப்பித்தல் வேண்டும்.

எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை பாலர் வகுப்பு மற்றும் தரம் 1 மாணவர்களுக்கு பிற்பகல் 2 மணிக்கும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தரம் -2 மாணவர்களுக்கு காலை 9 மணிக்கும், தரம்- 3 மாணவர்களுக்கு அன்றையதினம் பிற்பகல் 2 மணிக்கும் யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் போட்டிகள் நடைபெறவுள்ளன .

போட்டியில் பங்குபெற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலுள்ள அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்று அனுப்பி வைக்குமாறு சைவ சமய அபிவிருத்திக்கழகத்தின் பரீட்சைச் செயலாளர் சிறிக்காந்தன் தெரிவித்துள்ளார். (ச-ரி2)

# தொலைத்தொடர்புக் கோபுரம்

## எதிர்த்துப் போராடியோரிடம் பொலிஸாரால் வாக்குமூலம்



யாழ்ப்பாணம், ஜூலை 7
ஏழாலை தெற்கில் மக்கள் குடியிருப்புகள் அதிகமுள்ள தனியார் காணியில் அமைக்கப்படவுள்ள தொலைத்தொடர்பு கோபுரத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராடிய நால்வர் பொலிஸாரால் வரவழைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் புதன்கிழமை விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

அந்தப் பகுதி மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி குறித்த பகுதியில் பிரபல தொலைத்தொடர்பு நிறுவனமொன்றால் சுமார் 100 அடி உயரமான தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மக்கள் குடிமனைக்குள் இந்தக் கோபுரம் அமைக்கப்படுகிறது என அந்தப் பகுதி மக்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டு கடந்த வாரம் கவனவீர்ப்புப் போராட்டம், பேரணி என்பன முன்னெடுக்கப்பட்டன.

அதனையடுத்துக் கோபுரம் அமைக்கும் பணி தற்காலிகமாக கைவிடப்பட்டது.

இந்தநிலையில் இதற்கு எதிர்ப்பு வெளியிட்டு தொடர்ச்சியாக போராடிவரும் நால்வரின் பெயரைக் குறிப்பிட்டு சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.


முறைப்பாட்டுக்கமைய நேற்றுமுன்தினம் பெயர் குறிப்பிடப்பட்ட நால்வரும் வரவழைக்கப்பட்டு அவர்களிடம் தனித்தனியாக பொலிஸார் வாக்குமூலம் பெற்றுள்ளனர். (ச-ரி2- 66)

# வீடு அமைப்பதற்கு இராணுவம் அடிக்கல்

வடமராட்சி, ஜூலை 7
அல்வாய் பகுதியில் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு இராணுவத்தினரால் வீடொன்று அமைத்துக் கொடுப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

4 ஆவது சிங்கப் படைப்பிரிவின் முழுமையான ஆளணி கட்டுமானப் பங்களிப்பில் இந்த வீடு அமைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் கட்டைக்காடு 55 ஆவது படைப்பிரிவின் தளபதி, பருத்தித்துறை பிரதேச செயலாளர், பருத்தித்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், வன்னி எயிட் ஒருங்கிணைப்பாளர், கிராமஅலுவலர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகள் பங்கேற்றனர்.(ச-ரி3- 27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகும். மகிழ்ச்சி உண்டாகும். சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**இடபம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சி தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவை தவிர்க்கவும்.

**மிதுனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண் விவாதம் ஏற்படக்கூடும் .

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். நண்பர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். ஆனாலும், உற்சாகத்துக்குக் குறைவிருக்காது.

**சிம்மம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தேவையை நிறைவேற்றி மகிழும் வாய்ப்பு உண்டாகும். வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். முயற்சி செய்யவும். திடீர் செலவுகளை சமாளித்து விடுவீர்கள்.

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். உடல்நலனில் கவனம் தேவை.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உங்களுடைய யோசனையை ஏற்றுக்கொள் வார்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். பிள்ளைகளால் செலவுகள் ஏற்பட்டாலும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைக்கக்கூடும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. சிலருக்கு ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**மீனம்:** வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிணக்குகள் நீங்கும். எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். வரவு சுமாராகத்தான் இருக்கும்.

# கொடிகாமம் கூ. சங்க புதிய தலைவர் தெரிவு

கொடிகாமம். ஜூலை 7
கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக ப.கோடீஸ்வரநாதன் கடமையேற்றுள்ளார்.

சங்கத்தின் தலைவராக கடமையாற்றிய இ.அ. ஆனந்தராசா பதவி விலகியதையடுத்து அந்தப் பதவிக்கு உபதலைவராக கடமையாற்றிய ப.கோடீஸ்வரநாதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (ச-ரி3-9)

# மௌனமும் போராட்டமும்

'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்துக்குள் உள்வாங்கப்படாதவர்கள் நாடு முழுவதும் போராட்டங்களை நடத்திவருகின்றனர். வடக்கு மாகாணத்திலும் ஒவ்வொரு மாவட்டங்களிலும் மிகப்பெரியளவில் இந்தப் போராட்டங்கள் நடைபெற்றிருந்தன. வீதியை மறித்து போக்குவரத்தை முடக்கி – பொலிஸாரை எதிர்த்து அவர்கள் போராட்டங்களை நடத்தியிருந்தார்கள். நலன்புரித் திட்டத்துக்குள் தம்மை உள்வாங்காமைக்கா அரசு மீதான அவர்களது தார்மீகக் கோபம் நியாயமானது. அதனை அவர்கள் போராட்டமாக வெளிப்படுத்தியிருந்தார்கள். வடக்கில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் நடந்த இந்தப் போராட்டங்களில் குறைந்தது 200 பேர் வரையிலாவது ஒவ்வொரு நாளும் பங்கேற்றிருந்தார்கள்.

ஆனால் இதே காலப் பகுதியில் வடக்கில் இன்னும் சில போராட்டங்களும் நடைபெற்றிருந்தன. யாழ்ப்பாணத்தின் தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரைக்கு எதிரான போராட்டம், காணாமல் ஆக்கப்பட்டோரைத்தேடும் உறவினர்களின் போராட்டங்கள், காணி விடுவிப்புக்கான போராட்டங்கள் என தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டங்களும் நடைபெற்றிருந்தன. ஆனால் அந்தப் போராட்டங்களில் மிகமிகக் குறைந்தளவானோரே பங்கேற்றிருந்தனர். அந்தப் போராட்டத்துடன் நேரடியாகத் தொடர்புடையவர்களைத்தவிர வேறு எவரும் பங்கேற்கவில்லை என்றும் கூறலாம். இவை வடக்கின் இருவேறு முகங்களைக் காண்பிக்கின்றன.

தமது உரிமைக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய இனம் இன்று தமது இருப்பைக் கேள்விக்குறியாக்கும் விடயத்தில் அதீதமௌனம் காக்கின்ற அதேவேளையில் தமது வாழ்வுக்காக – நிவாரணத்துக்காகப் போராடவும் செய்கின்றது. போர் முடிந்த 14 ஆண்டுகள் தமிழினத்தின் போக்கையே திருப்பிப்போட்டிருக்கின்றன. பௌத்த – சிங்களப் பேரினவாத அரசுகள் எதனை எதிர்பார்த்தனவோ அது நடந்துகொண்டிருக்கின்றது. தங்கள் உரிமையைக்காட்டிலும் அன்றாட வாழ்வைப் பார்த்துக்கொண்டால்போதும் என்ற மனநிலை உருவாகியிருக்கின்றது. இந்த மோசமான நிலைமைக்கு மக்களை மாத்திரம் குற்றம் சொல்வதில் அர்த்தமில்லை.தமிழ்த்தேசியப் பரப்பில் இயங்குகின்ற அனைத்துக் கட்சிகளும் அதன் தலைமைகளும் இதற்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்களே. கடந்த 14 ஆண்டுகளாக மக்களை அவர்களின் உரிமைக் கோரிக்கைக்கான தடத்திலிருந்து திசைதிருப்பிய அனைவரும் இதன் பொறுப்பாளிகள். தமிழ்த் தேசிய அரசியல் பரப்பை தேர்தல் அரசியலுக்காக – வாக்கு அரசியலுக்காக எப்போது சுருக்கிக்கொண்டார்களோ அப்போது மக்கள் தமது உரிமைக்கோரிக்கைக்கான தடத்திலிருந்து திரும்ப ஆரம்பித்தார்கள். மக்களைக் கூட்டாக ஒன்றிணைத்து ஜனநாயக வழியில் மிகப்பெரிய போராட்டத்தை இன்றுவரை அரசியல் தலைமைகளால் நடத்த முடியாமல் இருக்கின்றது. போரின் பின்னரான இத்தனை ஆண்டுகளில், 'எழுக தமிழ்', 'பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை' போன்ற எழுச்சிகளைத் தவிர வேறு எந்தவொரு மிகப்பெரியளவிலான போராட்டத்தையும் தமிழ்ச் சமூகம் செய்திருக்கவில்லை.


தமிழ்ப் பரப்பில் இயங்குகின்ற சிவில் சமூகங்கள் ஏதோவொரு அரசியல் தரப்புக்கு முட்டுக்கொடுப்பதாகவே இயங்குகின்றன. அதைவிட தமிழ்த் தேசியக் கட்சிகளும் எதிர்த்தரப்புகள் மீது குற்றம் சுமத்தி தமது வாக்கு வங்கியை வளர்ப்பது தொடர்பில் தான் சிந்திக்கின்றனவே-தவிர, இத்தகைய மோசமான நிலைமைகளால் மக்கள் தமிழ்த் தேசியத் தடத்தைப் புறக்கணித்துவிடுவார்கள் என்ற தொலைநோக்குப் பார்வை எள்ளளவும் இல்லை. அண்மைக்காலத் தேர்தல்களில் தமிழ்த் தேசியத்துக்குப் புறம்பான சக்திகள் கூடியளவு வாக்குகளைப்பெறுவதற்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் வாக்கு அரசியலுக்கான கேவலமான ஆட்டம்தான் காரணம்.

மக்களுக்கான போராட்டங்களைக்கூட அரசியல் கட்சிகள் தம்மை முன்னிறுத்தி ஒழுங்கமைப்பதும், அந்தப் போராட்டங்களிலும் ஏனைய அரசியல் தரப்புகளை வசைபாடுவதும் என் எல்லாவற்றையும் வாக்கு அரசியல் என்ற ஒற்றைப் புள்ளிக்குள் சுருக்கி வருவதும், மக்களுக்கு இந்தப் போராட்டங்கள் மீதான நம்பிக்கையீனத்தை அதிகரிக்கச் செய்துவிட்டது. அதன் விளைவுகள் கண்ணெதிரே தெரிகின்றன.

தமிழின இருப்பையே கேள்விக்கு உட்படுத்தும் சிங்கள – பௌத்த நிகழ்ச்சி நிரலுக்கு எதிராக தமிழ்ச் சமூகம் ஒன்றாகத் திரளவேண்டிய இந்தச் சூழலில், தமது வாழ்வாதாரத்துக்கான போராட்டத்தில் அவர்களை நிற்க வைத்ததைத்தவிர கடந்த 14 ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கட்சிகள் வேறு எதையும் செய்யவில்லை.

## நாளொரு நல்வார்த்தை

"நீங்கள் ஓர் எதிரியை எதிர்கொள்ளும் போதெல்லாம். அவரை அன்பால் வெல்லுங்கள்"
– மகாத்மாகாந்தி






# மனித உரிமை பேசியிருந்தால் போரை முடித்திருக்கமுடியாது

கொழும்பு, ஜூலை 7

**தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை அழிப்பதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியில் எடுத்த தீர்மானத்தை அப்போது எவரேனும் அடிப்படை உரிமைகள் மீறல் என்று நீதிமன்றம் சென்றிருந்தால் போரை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கமுடியாது என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற 'நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள்' தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் அடிப்படை உரிமை மீறல் தொடர்பான மனுக்களின் விடயதானங்கள் வரையறை செய்யப்படவேண்டும்.

விடுதலைப்புலிகள் அமைப்பை அழிப்பதற்கு அரசு கொள்கை ரீதியில் எடுத்த தீர்மானத்தை அப்போது எவரேனும் அடிப்படை உரிமை மீறல் என்று நீதிமன்றம் சென்றிருந்தால் போரை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கமுடியாது. கொள்கை ரீதியில் அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களை நீதிபதிகள் விமர்சிப்பது நாட்டுக்குப் பொருத்தமற்றது.

வெளிநாடுகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்கு குறைந்தபட்சம் 4 ஆண்டு காலமேனும் செல்கிறது. வழக்கு விசாரணைகள் தாமதப்படும் போது பாதிக்கப்படும் தரப்பினர் ஒட்டுமொத்த அரச கட்டமைப்பையும் கடுமையாக விமர்சிப்பார்கள். நடைமுறையில் அவ்வாறான தன்மையே காணப்படுகிறது - என்றார். (எ-இ)

# கமகேயின் கஞ்சா ஓகஸ்டில் ஆரம்பம்!



கொழும்பு, ஜூலை 7

கஞ்சா பயிர்ச்செய்கைத் திட்டம் அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்தார்.

'கட்டுநாயக்கவிலுள்ள முதலீட்டுச்சபை வலயத்துள் கஞ்சா வளர்ப்புச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்காக 11 முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர். இன்னும் 2-3 வருடங்களில் 4 முதல் 5 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டமுடியும். இந்த உற்கத்திகள் நாட்டின் வருமானத்துக்கு பங்களிக்கும்- என்றார். (எ-இ)

### அலிசப்ரி தங்கம் கடத்தல்

# கட்சித் தலைவர்களுடன் ஆலோசித்தே தீர்மானம்

நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் தங்கம் கடத்திய சம்பவம் தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே தீர்மானம் எடுக்கப்படும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், தங்கக் கடத்தல் தொடர்பில் சுங்கத் திணைக்களத்தின் அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது. எதிர்வரும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதுதொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் - என்றார்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம், தங்கம், கையடக்கத்தொலை பேசிகள் ஆகியவற்றை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, தண்டம் விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-6)

**நாளை** 08.07.2023 சனிக்கிழமை ஆனி 23

சுபநேரம் : 02.58 - 04.28
ராகுகாலம் : 08.58 - 10.28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பம் பெற்றவர்களுக்குப் பதவிகள் மக்கள் நம்பிக்கையைச் சிதறடிக்கும்!



## நாடாளுமன்றில் விஜித ஹேரத் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூலை 7**

**கப்பம் பெற்ற விவகாரத்தில் நீதிமன்றத்தில் குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்டவர்கள் அமைச்சரவை உறுப்பினர்களாக இருக்கும்போது நாட்டு மக்கள் எவ்வாறு நீதித்துறையின் மீது நம்பிக்கை கொள்வார்கள்? அரசியல்வாதிகள் மனிதப் படுகொலையிலும் ஈடுபடலாம், அவர்களுக்கு ஒரு நீதி சாதாரண மக்களுக்கு பிறிதொரு நீதி என்ற நிலையே காணப்படுகிறது - இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை 'நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள்' தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள் முறையாக செயற்படுத்தப்பட வேண்டும். ஏட்டில் உள்ள சட்டங்கள் சமத்துவமான முறையில் செயற்படுத்தப்படுகிறதா? என்பது பிரச்சினையாக உள்ளது. சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களின் செயற்பாடுகளிலும் குறைபாடுகள் காணப்படுகின்றன. பொருளாதார படுகொலையாளர்கள் சுதந்திரமாக சுற்றித் திரியும்போது பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய முடியாது. வெளிநாட்டு முதலீட்டாளர்களும் நாட்டின் மீது நம்பிக்கை கொள்ளமாட்டார்கள். நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ள பின்னணியிலும் கப்பம் பெறும் கலாசாரம் இல்லாதொழிக்கப்படவில்லை. நீதிமன்றம் சுயாதீனமாகச் செயற்பட்டால் மாத்திரமே மக்கள் நீதிமன்றக் கட்டமைப்பின் மீது நம்பிக்கை கொள்வார்கள். நீதிமன்றத்தில் குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்டவர்கள், கப்பம் பெற்றவர்கள் பல வழிமுறையில் சட்டத்தில் இருந்து தப்பித்து அமைச்சரவையில் அங்கம் வகிக்கிறார்கள். சாதாரண மக்கள் சிறு குற்றம் செய்தாலும் அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சட்டவாட்சிக் கோட்பாட்டை முறையாக செயற்படுத்தாமல் ஒருபோதும் மாற்றத்தை எடுக்க முடியாது - என்றார். (எ-இ)

## கொழும்பு இலகு ரயில் திட்டம் ஜப்பானுடன் மீளப் பேச்சுகள்!

இலகு ரயில் போக்குவரத்துத் திட்டம் தொடர்பில் ஜப்பானுடன் இராஜதந்திர கலந்துரையாடல்களை ஆரம்பிக்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கொழும்பில் உள்ள ஜப்பானியத்தூதரகத்துடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து, மீண்டும் இலகு ரயில் திட்டத்தைச் செயற்படுத்தும் வகையில் பொருத்தமான காலக்கெடுவைத் தயாரிப்பதற்காக ஜனாதிபதியால் யோசனை முன்வைக்கப்பட்டது.

ஜப்பானின் நிதியுதவியுடன் கூடிய இலகு ரயில் போக்குவரத்துத் திட்டத்தை நிறுத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் அரசாங்கம் ஒருதலைப்பட்சமாகத் தீர்மானித்ததையடுத்து. இலங்கைக்கு 5 ஆயிரத்து 978 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டது. (எ-இ)

## வடக்கு – கிழக்கு வழக்குகளை தமிழ் நீதியரசரிடம் வழங்குக

### சார்ள்ஸ் எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 7

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு வரும் குற்றவியல் வழக்குகளை தமிழ் நீதியரசர்களிடம் ஒப்படைக்கவேண்டும் அல்லது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேன்முறையீட்டு நீதிமன்றங்களை அமைக்கவேண்டும் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.


நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு வரும் குற்றவியல் வழக்குக் கோவைகள் தொடர்பில் தாமதங்கள் ஏற்படுகின்றன. அதற்கு வடக்கு மற்றும் கிழக்கு நீதிமன்றங்களில் தமிழ்மொழியில் வழக்குகள் நடப்பதே காரணம். மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அந்தக் கோவைகள் வரும்போது ஆங்கில மொழிபெயர்ப்புகளில் தாமதம் காணப்படுகிறது. ஆனால் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் தமிழ் நீதியரசர்கள் உள்ளனர். அவர்களிடம் அந்த வழக்குகளை ஒப்படைக்கலாம். இல்லாவிட்டால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேன்முறையீட்டு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும். இதன்மூலம் வழக்கு தாமதங்களைத் தவிர்க்கலாம் - என்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் குறுக்கிட்டுக் கருத்துத் தெரிவித்த நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, நீதிமன்றங்களில் மொழி பெயர்ப்பாளர்களுக்கு நிலவும் பற்றாக்குறையே இதற்குக் காரணம். அதைத் தவிர்க்க வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பதிலளித்தார்.

இதன்பின்னர் தொடர்ந்தும் உரையாற்றிய சார்ள்ஸ் நிர்மலநாதன், பொய்யான வழக்குத் தாக்கல்களும் நீதிமன்ற நடவடிக்கையின் தாமதத்துக்கு ஒரு காரணியாக உள்ளன.

உதாரணமாக கடந்த பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் பொலிஸார் எங்கள் மீது வழக்குத் தொடர்ந்துள்ளனர். எந்தவித முறைப்பாடும் இன்றி மக்களுக்கு இடையூறு என வழக்கைத் தொடர்ந்துள்ளனர். இது முறையற்றது - என்றார். (எ-இ)



## இலங்கைக்கு வந்துள்ள காசோவரி பறவைகள்!

கொழும்பு, ஜூலை 7

இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான விலங்குப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ், தாய்லாந்தில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக தெஹிவளை மிருகக்காட்சிச் சாலைக்கு மூன்று "டபுள் வாட்டில்ட் காசோவரி" பறவைகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

சுமார் 5 அடி உயரமும் சுமார் 60 கிலோகிராம் எடையும் கொண்ட இந்த இனப் பறவைகள் உலகின் மிக மோசமான பறவைகளில் இரண்டாவது பெரிய பறவைக் குழுவைச் சேர்ந்தவை. மிகவும் வண்ணமயமான இந்தப் பறவைகள் வானில் பறக்க முடியாதவை.

அதேவேளை, இந்த விலங்கு பரிமாற்றத் திட்டத்தின் கீழ், இலங்கையில் இருந்து பல வகையான பாம்புகளைத் தாய்லாந்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## முறைகேட்டை வெளிப்படுத்தியதால் ஆசிரியரை வஞ்சித்த வலயம்

முல்லைத்தீவு, ஜூலை 7

தனது இரண்டு மாதகால சம்பள நிலுவை தடுத்துவைக்கப்பட்டுள்ளது என ஆசிரியரொருவரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்கப்பட்டதையடுத்து ஆசிரியருக்கான சம்பள நிலுவையை விடுவித்துள்ளது. முல்லைத்தீவு வலயக்கல்வி அலுவலகம், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து தமது இருமாத சம்பளத்தைப் பெற்றுத் தருமாறு முல்லைத்தீவு விசுவமடு மகா வித்தியாலயத்தை நிரந்தர பாடசாலையாகக் கொண்ட ஆசிரியரொருவர் கடந்த வாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்தார்.

முறைப்பாட்டில், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளரால் மே மற்றும் ஜுன் மாதக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. வலயக்கல்விப் பணிப்பாளரின் செயற்பாடானது எனக்கெதிரான திட்டமிட்ட பழிவாங்குதலே.

கடந்த ஆண்டு சிறப்பிக்கப்பட்ட முன்னாள் அதிபரின் மணிவிழாவுக்கு எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் திரட்டிய நிதி தொடர்பில் தகவல் அறியும் சட்டத்தினூடாக கேள்விகளைத் தொடுத்திருந்தேன்.

இந்தநிலையில் நான் தற்காலிக பணியிடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் வந்த நிலையில் எனது இரு மாதக் கொடுப்பனவுகளை திட்டமிட்ட முறையில் இழுத்தடிப்புச் செய்கிறார். எனது உழைப்புக்கான ஊதியத்தை வழங்க வேண்டும் - என்றுள்ளது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினிடம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம் விளக்கத்தைக் கோரியது. அதனையடுத்து குறித்த ஆசிரியரின் சம்பள நிலுவையை முல்லைத்தீவு வலயக்கல்வி அலுவலகம் இருநாள்களில் விடுவித்துள்ளது. (ச-27)

## இளம்பெண் வெட்டிக்கொலை

கொழும்பு, ஜூலை 7

கம்பஹா - அத்தனகல்ல பிரதேசத்தில் 21 வயதுடைய இளம் பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். மோட்டார் சைக்கிளில் வந்த, முகத்தை மூடிய தலைக் கவசத்தை அணிந்த இருவர் வீட்டினுள் நுழைந்து குறித்த யுவதியை கூரிய ஆயுதத்தால் சரமாரியாக வெட்டிவிட்டுத் தப்பியோடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் காதல் விவகாரமே கொலைக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது. (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

இலக்கம்: 207, புகழேந்திநகர், யோகபுரத்தில் வசிக்கும் **சிவப்பிரகாசம் அலங்காரகுராசா** ஆகிய நான் (N.I.C193731010024) எனது முதற்பெயரினை **சிவப்பிரகாசம் இராசதுரை** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சிவப்பிரகாசம் இராசதுரை** என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

**சிவப்பிரகாசம் இராசதுரை**

## பெயர் மாற்றம்

இலக்கம்: 207, புகழேந்திநகர், யோகபுரத்தில் வசிக்கும் **பொன்னம்பலம் தங்கராணி** ஆகிய நான் (N.I.C 195354310031) எனது முதற்பெயரினை **பொன்னம்பலம் பவளம்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **பொன்னம்பலம் பவளம்** என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

**பொன்னம்பலம் பவளம்**

# வாகன விபத்தில் தம்பதியினர் பலி

குருநாகல் - தம்புள்ள பிரதான வீதியின் படகமுவ காப்புப் பகுதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மீது லொறி மோதியதில் இளம் தம்பதியினர் உயிரிழந்தனர்.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில் 34 வயதுடைய சி.பி.அமில புஷ்பசிறி என்பவரும், 33 வயதுடைய அவரது மனைவி சதுராணி நிசன்சலா குமாரி என்பவரும் உயிரிழந்துள்ளனர். குருநாகல் கட்டுவன மகிந்த கல்லூரியில் ஆறாம் தரத்தில் கல்வி கற்கும் தமது ஒரே மகளை அழைத்துச் செல்வதற்காகச் சென்ற போதே குறித்த தம்பதியினர் விபத்தில் சிக்கியுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-22)

## மரண அறிவித்தல்

தோற்றம் 21.02.1942 **வீரசிங்கம் கந்தசாமி** மறைவு 06.07.2023

(ஓய்வுபெற்ற இ.போ.ச.சாரதி)



அளவெட்டி தெற்கு, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், அச்செழுவை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் கந்தசாமி (ஓய்வுபெற்ற இ.போ.ச.சாரதி) நேற்று (06.07.2023) வியாழக்கிழமை அளவெட்டியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் மூத்தமகனும், காலஞ்சென்ற இளைய பிள்ளையின் கணவரும், காலஞ்சென்ற தவமணிதேவி மற்றும் குணமணிதேவி, கருணாகரன் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நரேந்திரன், சுரேந்திரம், றமேந்திரன் (பிரான்ஸ்), சுயாதா, கவீந்திரன், கோபிக்கீதா ஆகியோரின் அன்பு மாமனாரும், மேகலன், ஆரூரன், வித்தகி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இ (07.07.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது உ த்தில் இடம்பெற்று பூதவுடல் அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **மருமக்கள்.**

**077 303 1115, 077 356 4459** (CS/25466)AH-1

## தேவை

யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ள வியாபாரக் கட்டடத்திற்கு பின்வருவோர் தேவை.

1) தோட்ட வேலையில் ஆர்வமுடைய ஊழியர்
2) பெயின்ரிங் வேலை தெரிந்த தொழிலாளர் (நாட் கூலி அடிப்படையில்)

**077 953 0496**

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்

### பிரதேச சபைக் கடைகளினை குத்தகைக்கு பெற்று ஒப்பந்தம் புதுப்பிக்க தவறியவர்களிற்கான அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் பின்வரும் கடைகளுக்குரிய குத்தகை ஒப்பந்தம் காலாவதியாகியுள்ளது. ஒப்பந்தத்தினை புதுப்பிக்குமாறு எம்மால் கடிதம் மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தும் இதுவரை குத்தகை ஒப்பந்தத்தினை புதுப்பிக்க தவறிய குறித்த கடைகளின் குத்தகைதாரர்கள் சபையின் தலைமைக் காரியாலயத்திற்கு 07.08.2023ம் திகதிக்கு முன்னர் நேரடியாக சமூகமளித்து பிரதேச சபையினால் தங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட கடைகளுக்கான குத்தகை ஒப்பந்தத்தினைப் புதுப்பித்துக்கொள்ளுமாறு அறியத்தரப்படுகின்றது. 07.08.2023 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்பந்தத்தினைப் புதுப்பிக்க தவறிய பின்வரும் கடைகள் ஒப்பந்தத்தின் பிரகாரம் 08.08.2023 ஆம் திகதியிலிருந்து பிரதேச சபையினால் மீளப் பொறுப்பேற்கப்படும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.


| தொ.இல | கடை இல | கடை அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 01 | கடை இல -22 | அச்சுவேலி பஸ் தரிப்பு நிலையம் |
| 02 | கடை இல – 16 (16,16A) | அச்சுவேலி பொது சந்தை உட்புறம் |
| 03 | கடை இல – 23 | அச்சுவேலி பஸ் தரிப்பு நிலையம் |

**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**
2023.07.07 (cs.37209) (N.1)

# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

## அமரர் சின்னட்டிப்பிள்ளை தம்பிராசா

### (ராஜா மெடிக்கல் ஸ்ரோஸ் சுன்னாகம்)



அன்றில் பறவைபோல இணைபிரியாது இல்லற வாழ்வதனை
இன்பமாய் வாழ்ந்து வந்தோம் இன்று துணை இழந்து
தவிக்கிறேன் அன்புத் தெய்வமே!
அப்பா என்று சொன்னதும் அணைத்திடத்துடிக்கும்
தங்கள் கரங்களைத் தேடித்தவிக்கின்றோம்.
அப்பாவின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

கடந்த 07.06.2023 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வானது இன்று (07.07.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இல. 74, ஜெயந்திநகர், கிளிநொச்சி என்ற முகவரியில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்செய்தி அறிந்து பல வழிகளில் ஆறுதல் கூறியவர்களுக்கும், உதவிபுரிந்தவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**இல.74, ஜெயந்தி நகர், கிளிநொச்சி.**

**குடும்பத்தினர்**

தோற்றம் **12.07.1932** மறைவு **07.06.2023**

(cs 51145) (N -1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GLOCAL
கிளோகல் பெயார் FAIR 2023

# வடக்கின் ஒளிமயம்



ශ්‍රී ලංකා විදේශ සේවා නියුක්ති කාර්යාංශය
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
Sri Lanka Bureau of Foreign Employment

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்படும் Glocal Fair 2023 (வட மாகாணம் - யாழ்ப்பாணம்) நடமாடும் சந்தை நிகழ்ச்சி 2023 ஜூலை மாதம் 15 ஆம் 16 ஆம் திகதிகளில் யாழ். முற்றவெளி மைதானத்தில் இடம்பெறவுள்ளதுடன், அதிலே இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் ஏற்பாடு செய்யப்படும் "வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தை" இல் பணியகத்தில் பதிவாகியுள்ள அனுமதிபெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் பங்குபற்றவுள்ளன.

மேற்குறிப்பிட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தையில் பங்குபற்றும் வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களின் கையிருப்பிலுள்ள வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் குறித்த விபரங்கள் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அவற்றிற்கான நேர்காணல்கள் குறித்த இரு (02) தினங்களிலும் நிகழ்வில் போது இடம்பெறவுள்ளன.

நீங்கள் எதிர்பார்க்கும் வேலைவாய்ப்பு கீழே குறிப்பிடப்பட்டிருக்குமேயானால், உங்கள் சுயவிபரக்கோவையின் (CV) வலதுபக்க மேல் மூலையிலும் மின்னஞ்சலின் Subject பகுதியிலும் விண்ணப்பிக்கும் வெற்றிடம், நாடு மற்றும் வேதனம் என்பவற்றை குறிப்பிட்டு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் முகாமையாளர் - சந்தைப்படுத்தலுக்கும் மற்றும் முகாமையாளர் - மனிதவள வழங்கல் மற்றும் சேவை பெறுனர் உதவிகளுக்கும் கிடைக்குமாறு மின்னஞ்சல் (mgr_mkt@slbfe.lk / mgr_manpower@slbfe.lk) மூலம் 2023 ஜூலை மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு அனுப்புங்கள்.

| தொழில் | நாடு நாணயம் மற்றும் அடிப்படை வேதனம் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கட்டார் "QR" | குவைட் "KD" | சிங்கப்பூர் "SD" | ருமேனியா "USD" | சவுதி அரேபியா "SR" | பஹ்ரேய்ன் "BD" | ஐக்கிய அரபு இராச்சியம் "DH" | சைப்ரஸ் "ER" | அல்பேனியா "USD" | ஐக்கிய இராச்சியம் "UP" | ஓமான் "OR" | தென் கொரியா "KW" | ஜப்பான் "YN" |
| Welder | 1500 | | | 550 | | | | | 600 | | | | |
| Pipe Fitter | 1500 | | | | | | | | | | | | |
| Technician - Electrical | 1300 | | | 600 | | | | | | | | | |
| HVAC Technician | 1300 | | | | | | | | | | | | |
| Carpenter | 1300 | | | 600 | | | | | | | | | |
| Spa Therapist | | 120 | | | | | | | | | | | |
| Waiter | | 120 | | | 1200 | | | 937 | | | | | |
| Waitress | | 115 | | 500 | | | | | | | | | |
| Assistant Health Care | | | 600 | | | | | | | | | | |
| Nursing Aide | | | 800 | | | | | | | | | | |
| Nurse - Staff | | | 1800 | | | | | 550 | | | | | |
| Nurse – General | | 250 | 1200 | | | | | | | 2250 | | | |
| Mason | | | 546 | 600 | | | 1200 | | 600 | | | | |
| Plaster | | | 546 | 600 | | | | | | | | | |
| Block Setter | | | | 550 | | | | | | | | | |
| Tile Setter | | | | 550 | | | | | | | | | |
| Fixer - Steel | | | | 550 | | | | | | | | | |
| Bartender | | | | 550 | | | | | | 450 | | | |
| Plumber | | | 546 | 600 | | | 1200 | | 500 | | | | |
| Worker - General | 1000 | | 550 | | | | | | | | | | |
| Roofer | | | 550 | | | | | | | | | | |
| Electrician | | 546 | 600 | | | | | | | | | | |
| Chef | | 130 | | | | | | | 500 | | | | |
| Assistant Chef | | 100 | | 650 | | | | | | | | | |
| Souse Chef | | 375 | | | | | | | | | | | |
| Cook - General | | | | 600 | | | | 1183 | | | | | |
| Chef de Party | | | | 650 | | | | | | | | | |
| Demi chef de party | | | | 600 | | | | | | | | | |
| Assistant cook | | | | 550 | | | | | | | | | |
| Maker – Pastry | | | | 550 | | | | | | | | | |
| Maker - Salad | | | | 550 | | | | | | | | | |
| Baker | | | | 550 | 1300 | | | | | | 121 | | |
| Dishwasher | | | | 500 | | | | | 500 | 450 | | | |
| Helper cook - Hotel | | 110 | | 550 | | | | | 450 | | | | |
| Cleaner - kitchen | | | | 500 | | | | | | | | | |
| Barman – senior | | | | 600 | | | | | | | | | |
| Operator –'sewing machine | | | | 500 | | | | | | | | | |
| Baby sitter | | | | 400 | | | | | | | | | |
| Veterinary Assistant | | | | 450 | | | | | | | | | |
| Veterinary Doctor | | | | 600 | | | | | | | | | |
| Restaurant Manager | | | | 600 | | | | | | | | | |
| Night Guard | | | | 400 | | | | | | | | | |
| Receptionist | | | | 400 | | | | | | | | | |
| Call center operator | | | | 450 | | | | | | | | | |
| Engineer | | | | 900 | | | | | | | | | |
| Building Painter | | | | 500 | | | | | | | | | |
| Mechanic - Vehicle | | 150 | | 450 | | | | | | | | | |
| Auto - Electrician | | | | 450 | | | | | | | | | |
| Injector Pump Mechanic | | | | 450 | | | | | | | | | |
| Car Denter | | | | 450 | | | | | | | | | |
| Mechanic – Heavy Equipment | | | | 450 | | | | | | | | | |
| Crane Operator | | | | 350 | | | | | | | | | |
| Car Washer | | | | 500 | | | | | | | | | |
| Driver – Heavy vehicle | 1000 | 120 | | 450 | 1700 | | | | | | | | |
| Driver – Light vehicle | 1000 | 150 | | 450 | | | | | | | | | |
| Auto AC technician | | | | 450 | 1500 | | | | | | | | |
| Lathe Machine Operator | | | | 600 | | | | | | | | | |
| Swing Machine operator | | | | 400 | | | | | | | | | |
| Upholster | | | | 400 | | | | | | | | | |
| Automotive Cable Operator | | | | 500 | | | | | | | | | |
| Caregiver | | | 550 | 450 | | | | 1000 | | 2167 | | | 2000000 |
| IT Programmer | | | | 450 | | | | | | | | | |
| Software Engineer | | | | 500 | | | | | | | | | |
| Hardware Engineer | | | | 500 | | | | | | | | | |
| Animal Caretaker | | | | 400 | | | | | | | | | |
| Office Assistant | | | | 400 | | | | | | | | | |
| Fruit Plucker | | | | 400 | | | | | | | | | |
| Butcher | | | | 400 | 1300 | | | | | | | | |
| Civil Engineer | | | | 800 | | | | | | | | | |
| Locksmith | | | | 600 | | | | | | | | | |
| Security Guard | | 111 | | | | 90 | 1200 | | | | | | |
| Cleaner- Male | 1100 | | | 500 | 900 | 80 | | | | | | | |
| Cleaner – Female | 1100 | | | 500 | 800 | 80 | 800 | | | | | | |
| Concierge – Female | | | | | | | 830 | | | | | | |
| Attendant – Bus | | | | | | | 800 | | | | | | |
| Customer service agent | | | | | | | 2000 | | | | | | |
| Clerk – General | | 150 | | | | | 1500 | | | | | | |
| Labour – Agriculture | | | | | | | | 465 | | | | | |
| Baby Care | | 230 | | | | | | | | | | | |
| Elder Care | | 230 | | | | | | | | | | | |
| Biker – Delivery | | 110 | | | | | | | | | | | |
| Construction Labour | | | 546 | | | | | | 450 | | | | |
| Fish Monger | | | | | 1300 | | | | | | | | |
| Commi 2 | | 125 | | | | | | | | | | | |
| Commi 3 | | 110 | | | | | | | | | | | |
| Helper – Kitchen | | 95 | | | 800 | | | | | | | | |
| Sales Girl | | | | | | | 1400 | | | | | | |
| Sales Boy | | | | | | | 1400 | | | | | | |
| Fork Lift Operator | | | | | 1500 | | | | | | | | |
| Female Trainer – Fitness | | | | | 2000 | | | | | | | | |
| Ship Painter | | | | | | | | | | | | 1914440 | |
| Scaffolder | | | | 600 | | | | | | | | | |
| Painter/ Plastering | | | | 600 | | | | | | | | | |
| Female Garment Helper | | | | | | | | | | | 105 | | |
| Accountant | | 250 | | | | | | | | | | | |
| SSW – Agriculture | | | | | | | | | | | | | 180000 |
| SSW – Food service | | | | | | | | | | | | | 180000 |
| Worker – Ceramic | 1070 | | | | | | | | | | | | |
| Foreman | 1500 | | | | | | | | | | | | |
| Life Guard | | | | | | | 1100 | | | | | | |
| Tailor – Female | | | | 600 | | | | | | | | | |
| Hair Dresser | | | | 550 | | | | | | | | | |
| Pattern maker - Garment | | | | 500 | | | | | | | | | |
| Elevator & Electrical Technician | | | | | | | 2000 | | | | | | |

" நாணயம்

தலைமைத் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
துரித அழைப்பு இலக்கம் 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அதி உஷ்ண நாளாக ஜூலை 3

வொஷிங்டன், ஜூலை 7

உலகில் இதுவரை பதிவுசெய்யப்பட்ட மிக அதிக வெப்பமான நாளாக கடந்த ஜூலை 3 ஆம் திகதி பதிவாகியுள்ளது.

அன்றையதினம் சராசரி உலக வெப்பநிலை 17.01 டிகிரி செல்சியஸ் அளவை எட்டியுள்ளது.

இதற்கு முன்பு கடந்த 2016 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் உலகின் சராசரி வெப்பநிலை 16.92 டிகிரி செல்ஸியசாகப் பதிவாகியிருந்தது. அதுவே உலகின் மிக அதிக தகிக்கும் வெப்பநிலையாகப் பதிவு செய்யப்பட்ட நிலையில் தற்போது அதை விட அதிக வெப்பநிலை ஜூலை 3இல் பதிவாகியுள்ளது. (ச-இ)



# வெள்ளை மாளிகையில் நுழைந்த 'கொக்கேய்ன்'

வொஷிங்டன், ஜூலை 7

உச்சக்கட்ட பாதுகாப்பைக் கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி வசிக்கும் வெள்ளை மாளிகையில் கொக்கேய்ன் போதைப்பொருள் பவுடர் மீட்கப்பட்டமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளும் அதிகாரிகளால் அவை மீட்கப்பட்டுள்ளன. பலத்தபாதுகாப்புள்ள வெள்ளை மாளிகைக்குள் போதைப்பொருள் எப்படி நுழைந்தது என்பது குறித்து விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# 'முத்து'வின் சிகிச்சைச் செலவு ஏற்றார் தாய்லாந்து மன்னர்

பாங்கொங், ஜூலை 7

இலங்கையிலிருந்து கொண்டுசெல்லப்பட்ட முத்துராஜா யானையின் சிகிச்சைக்குத் தேவையான நிதியை வழங்குவதற்கு தாய்லாந்து மன்னர் மகா வஜிரலொங்கோர்ன் முன்வந்துள்ளார்.

இலங்கையிலிருந்து நோய்வாய்ப்பட்டு கொண்டு செல்லப்பட்ட 30வயதான முத்துராஜா, தற்போது தாய்லாந்து லம்பொங் மாகாண சரணாலயத்தின் யானைகள் மருத்துவமனையில் உள்ளது.

யானையின் இடுப்பின் இரண்டு பக்கங்களிலும் காயங்கள் காணப்படுகின்றன.

சக்சுரின் மீண்டும் வலுவான நிலைக்குத் திரும்பும் வரை அது பராமரிக்கப்பட வேண்டும்.

யானைக்கு வேறு நோய்கள் உள்ளதா என்பதை கண்டுபிடிப்பதற்கான மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னரே அதனை ஏனைய யானைகளுடன் பழக அனுமதிக்க முடியும். இந்த நிலையில் சக்சுரினின் மருத்துவச் செலவை தாய்லாந்து மன்னர் ஏற்றுள்ளார். (ச-இ)

# தோல் புற்றுநோய் கண்டறியச் செயலி



ரொரண்டோ, ஜூலை 7

கனேடியப் பொறியியலாளர் ஒருவர் புற்றுநோயைக் கண்டறியச் செயலி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்.

இந்தச் செயலி, தோல் புற்றுநோய் தொடர்பில் துல்லியமான தகவல்களை வழங்கக்கூடிய செயலி என தெரிவிக்கப்படுகின்றது.

இதன் மூலம் மருத்துவமனைக்குச் செல்லாது வீட்டிலேயே தோல் புற்றுநோய் தொடர்பில் பரிசோதனைகளைச் செய்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

ஹார்ஷ் ஷா என்ற பொறியியலாளரே இந்த புதிய செயலியை அறிமுகம் செய்துள்ளார்.

செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் முறைமை ஆகிய தொழில்நுட்பங்களின் அடிப்படையில் நோய்க்காரணிகள் கண்டறியப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தோண்டத்தோண்ட...

மீட்கப்பட்டுள்ள எச்சங்கள் 12 பேருடையவையாக இருக்கலாம் என்றும், அவற்றில் பெருமளவானவை பெண்களுடையவை என்றும் முதற்கட்டத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் நீர் இணைப்பை மேற்கொள்வதற்காக கடந்த மாதம் 29ஆம் திகதி கிடங்கு ஒன்றை வெட்டியபோது அதற்குள் இருந்து மனித எச்சங்களும், உடைகளும் அவதானிக்கப்பட்டன. இதையடுத்து விடயம் தொடர்பில் மறுநாள் 30ஆம் திகதி நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. அன்றையதினமே அந்த இடத்தைப் பார்வையிட்ட முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா, சான்றுப் பொருள்கள் மீட்கப்பட்ட பகுதியை பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவித்ததுடன், எதிர்வரும் 6ஆம் திகதி (நேற்று) அகழ்வுப் பணிகளை முன்னெடுக்குமாறும் உத்தரவிட்டார்.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிவான் ரி.பிரதீபன் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. பாதுகாப்புக் காரணங்களுக்காக பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். முல்லைத்தீவு மாவட்ட சட்ட மருத்துவ அதிகாரி, தடயவியல் பொலிஸார், கிராம அலுவலர், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், சட்டத்தரணிகள் உள்ளிட்டோரின் அவதானிப்பின் கீழ் இந்த அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

நேற்று மாலை வரையில் 20 அடி நீளம் வரையில் தோண்டப்பட்டு முன்னெடுக்கப்பட்ட அகழ்வுகளின் அடிப்படையில் 12 உடல்களின் எச்சங்கள் மீட்கப்பட்டன. அத்துடன் உடைகளின் சிதிலங்களும் மீட்கப்பட்டன. எச்சங்களும், உடைகளும் விடுதலைப் புலிகளுடையதாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகின்றது. அத்துடன் நேற்றைய அகழ்வுகளின் அடிப்படையில் புதைகுழியின் சரியான இட அமைவு அவதானிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-19,246)

## முல்லை....

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் எதிர்வரும் 13ஆம் திகதி மேற்கொள்ளப்படவுள்ளது.

நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்ட அகழ்வின்போது மனித எச்சங்கள் மற்றும் உடைகள் 'கவனக் குவிவான முறையில்' அவதானிக்கப்பட்டதையடுத்து, அகழ்வுப்பணிகள் முடிவுறுத்தப்படாமல் இடைநிறுத்தப்பட்டது. இந்த நிலையிலேயே, அகழ்வுப் பணிகளுடன் தொடர்புடைய திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் பங்குபற்றலுடன் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் தொடர்பான பரிசீலனை எதிர்வரும் 13ஆம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது. (அ-ம-19-246)

## உண்மையை...

மூடி மறைப்பதற்காக புலனாய்வாளர்களின் பங்குபற்றலுடன் அடுத்தகட்ட நடவடிக்கைக்குச் சிலர் தயாராகிக் கொண்டுள்ளனர் என்று நடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கைகள் நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அங்கு சென்று கருத்துத் தெரிவிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு புதைகுழி தொடர்பான அகழ்வுப் பணிகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு, சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள் உள்ளன. ஆனால், இந்த அகழ்வின்போது (கொக்குத்தொடுவாய்) அந்த நியமங்கள் பின்பற்றப்பட்டதாகத் தெரியவில்லை. மன்னார் நீதிமன்றத்திலும் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கொன்று நேற்று (நேற்றுமுன்தினம்) நடைபெற்றது. ஒட்டுமொத்தத்தில் இந்தப் புதைகுழிகள் திருப்தியான முறையில் அணுகப்படவோ - ஆராயப்படவோ இல்லை.

இந்த நாட்டில் பல ஆயிரம் மக்கள் காணாமற்போயுள்ளனர். அது தொடர்பாக பல்வேறுபட்ட நடவடிக்கைகள் - கருத்தாடல்கள் - வலியுறுத்தல்கள் தற்போதும் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறிருக்கையில் இந்த விவகாரத்துக்கு நெருக்கமான இவ்வாறான விடயங்கள் (புதைகுழி அகழ்வு) சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில் அணுகப்படவேண்டும். அந்த நிலை இலங்கையில் இல்லை. மாறாக அகழ்வுப் பணிகள் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டால் மருத்துவர்கள், நீதிவான்கள் இடமாற்றத்துக்கு உட்படுகின்றனர். இன்னும் வெளிப்படையாகச் சொன்னால், விடயத்தை மூடிமறைப்பது தான் அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளது.

இந்த இடத்தில் இருந்து (கொக்குத்தொடுவாய்) எடுக்கப்படுகின்ற சான்றுப் பொருள்கள்கூட கவனமாகப் பேணிப் பாதுகாக்கப்படவில்லை. புலனாய்வாளர்கள் ஏராளமானவர்கள் இங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்கள். புலனாய்வாளர்கள் இங்கு வந்து, யார் என்ன செய்கின்றார்கள் என்ற தகவல்களை அனுப்பிக்கொண்டிருக்கின்றார்கள். இந்த விடயத்தை மறைக்க நினைப்பவர்கள் அடுத்த நடவடிக்கைக்கு தயாராகின்றார்கள். ஆகையால் இது சரியான விதத்தில் பாதுகாக்கப்பட - கையாளப்பட வேண்டும் - என்றார். (அ-ம-19,246)

## மனிதப்புதைகுழி...

இது தொடர்பில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொக்குத்தொடுவாய் பகுதி நீண்டகாலமாக ஒரு சூனியப் பிரதேசமாக இருந்த ஒரு பகுதியாகும். கடந்த 1984ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இங்கிருந்த தமிழ் மக்கள் அனைவரையும் இராணுவம் வெளியேற்றியது. அப்போதிருந்து நீண்டகாலமாக கொக்குத்தொடுவாய் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்த ஒரு சூனியப் பகுதியாகக் காணப்பட்டது.

கடந்த 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் போர் மௌனிக்கப்பட்டபோது சரணடைந்தவர்கள் பேருந்துகளில் ஏற்றப்பட்டு சில இடங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டதாக நாம் அறிகின்றோம். அவ்வாறு சரணடைந்தவர்கள்கூட இராணுவத்தினரால் படுகொலைசெய்யப்பட்டு, பின்னர் இராணுவ சூனியப் பிரதேசமான இங்கே கொண்டுவந்து புதைக்கப்பட்டிருக்கக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

தற்போது இங்கே அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளும்போது பல மனித எச்சங்கள் தொடர்ந்தும் தென்படுவதை அவதானிக்க முடிகின்றது. மேலும் இங்கு அகழ்வுப் பணிகள் முறையாக இடம்பெறுவதாக எமக்குத் தெரியவில்லை. இங்கு அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித எச்சங்கள் பாதுகாப்பின்றி பெட்டிகளில் வைக்கப்பட்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. எனவே சரியான விதத்தில் இந்த அகழ்வுப்பணிகளுடைய முடிவுகள் இருக்குமா? என்பதிலும் எமக்குச் சந்தேகமிருக்கின்றது. சர்வதேச நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் இந்த அகழ்வுப்பணிகளில் ஈடுபடவேண்டும் என்பதுடன், சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில், சர்வதேச நியதிகளைப் பின்பற்றி இந்த அகழ்வுப் பணிகள் இடம்பெற வேண்டும் என்பது எமது கோரிக்கையாகவிருக்கின்றது.

இறுதிக்கட்டப் போரின்போது சரணடைந்த தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகளுக்கு மன்னிப்பு வழங்காது, சரணடைந்தவர்கள் படுகொலைசெய்யப்பட்டு, இங்கு புதைக்கப்பட்டிருப்பதாகவே மக்கள் சந்தேகிக்கின்றனர். இதனைவிட இங்குள்ள முக்கியமான இராணுவ முகாம்களில், குறிப்பாக வட்டுவாகல், கேப்பாப்பிலவு போன்ற இடங்களில் பெரும் புத்தவிகாரைகள் நிறுவப்பட்டுள்ளன.

ஆனால், அவ்வாறு பெரும் அளவில் இராணுவமுகாம்களில் விகாரைகள் அமைக்கவேண்டிய தேவையில்லை. பல இராணுவ முகாங்களில் சிறிய அளவிலான விகாரைகள் அமைக்கப்பட்டிருக்கும்போது கேப்பாப்பிலவு, வட்டுவாகல் உள்ளிட்ட சில இராணுவமுகாம்களில் பெரிதான விகாரைகள் நிறுவப்பட்டுள்ள தன் சூட்சுமம் என்ன?

இவ்வாறான இராணுவமுகாம்களில் அமைந்துள்ள விகாரைகளின் கீழ்ப் பகுதிகளில், இறுதிக்கட்டப் போரில் சரணடைந்தவர்கள் படுகொலைசெய்யப்பட்டு, அவர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதா? என்ற சந்தேகங்களும் எழுகின்றன - என்றார். (அ-ம-246)

## மனிதப்...

தொடர்பான உண்மைகள் நீதியான முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி முல்லைத்தீவில் இன்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக இன்று மு.ப. 10 மணியளவில், 'இலங்கை அரசே கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான உண்மை, நீதி, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துக' எனும் தொனிப் பொருளில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கோரிக்கைகள் வலுப்பெற உதவுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-ம-246)

## பேரவை...

பேசி அழைப்புகள் வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேரவையின் உறுப்பினர்கள் சிலருக்குத் தெரியாத கைத்தொலைபேசி இலக்கங்களில் இருந்து அழைப்பு மேற்கொள்ளப்பட்டு, 'நாங்கள் அரச புலனாய்வுச் சேவையில் இருந்து (எஸ்.ஐ.எஸ்.) அழைக்கிறோம். யார் துணைவேந்தராக வரவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்? ஏன் அவரை விரும்புகிறீர்கள்? நாங்கள் தான் இரகசிய அறிக்கை கொடுக்க வேண்டும். அதற்காகத்தான் கேட்கிறோம்' என்று பேசப்பட்டதாகப் பேரவை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

துணைவேந்தர் தெரிவுக்கான நாள் நெருங்கிவரும் நேரத்தில் இவ்வாறு அழைக்கப்படுவது நல்லதல்ல என்று பேரவை உறுப்பினர்கள் சிலர் விசனமடைந்துள்ளனர். (அ-ம-5)

## சிவப்புப் பட்டியல்...

மின்சார நிலையத்துக்குச் சென்று வாக்குவாதம் செய்த இருவர், மின்சார நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது தாக்குதலும் நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டை மின்சார நிலையத்தில் நேற்றையதினம் இடம்பெற்றுள்ளது.

சிவப்பு எச்சரிக்கைத் துண்டு தொடர்பில், மின்சார நிலைய ஊழியர்களுடன் வாக்குவாதத்தில் அவர்கள் ஈடுபட்டபோது அவ்விடத்துக்கு வந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் அவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுத்தபோதே அவர் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்தியவர்கள் மதுபோதையில் இருந்தனர் என்றும் பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு உள்ளான பாதுகாப்பு ஊழியர் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ம-27)

## 7% பணவீக்கம்...

மத்திய வங்கியின் ஆளுநர் தலைமையில் மத்திய வங்கியின் அதிகாரிகள் பங்குபற்றலுடன் நேற்றையதினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 69.9 வீதமாக இருந்த பணவீக்கம், கடந்த ஜூன் மாதத்தில் 12 வீதமாகக் குறைந்தது. இது மேலும் குறையலாம். இதன்படி இந்த மாதத்தின் இறுதிப் பகுதியில் இலங்கையின் பணவீக்கம் 7 வீதமளவுக்குச் செல்லலாம் என்று நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-ம)

## லாப்ஸ்...

வாயுவின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என்று லாப்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி 12.5 கிலோகிராம் எடையுள்ள எரிவாயுவின் விலை 300 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 3 ஆயிரத்து 690 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதேவேளை - 5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 120 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக ஆயிரத்து 476 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## பணவீக்கம்...

விளைவாக, வைப்புக்கள் மற்றும் கடன்களுக்கான வட்டிவீதங்கள் முறையே 11 மற்றும் 12 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருப்பதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் இவ்வருடத்துக்கான ஐந்தாவது கூட்டம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே கொள்கை வட்டிவீதங்களை மேலும் 200 அடிப்படைப்புள்ளிகளால் குறைப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, இதுவரை முறையே 13 சதவீதமாகவும், 14 சதவீதமாகவும் காணப்பட்ட துணைநில் வைப்பு வசதிவீதம் மற்றும் துணைநில் கடன்வசதிவீதம் என்பன மேலும் 200 அடிப்படைப்புள்ளிகளால் முறையே 11 சதவீதம் மற்றும் 12 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளன.

எனவே, இந்த நாணயக்கொள்கைத் தளர்வின் ஊடாகக் கிடைக்கப்பெறும் நன்மையை பொதுமக்களுக்கும் வணிக நடவடிக்கைகளுக்கும் பெற்றுக்கொடுக்குமாறு வங்கி மற்றும் நிதியியல் துறையினரிடம் மத்திய வங்கி வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியான வாழ்க்கையில்

# அமெரிக்காவைப் பின்தள்ளி இலங்கை முன்னேற்றமாம்!

கொழும்பு, ஜூலை 7

சர்வதேச நாடுகளிடையே, அமைதியான வாழ்க்கை முறை தொடர்பில் நடத்தப்பட்ட ஆய்வொன்றில் அமெரிக்கா மற்றும் இந்தியாவைப் பின்தள்ளியுள்ளது இலங்கை. இதன்படி இலங்கை 107ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

இராணுவ மயமாக்கல், இராணுவத்துக்கான ஒதுக்கீடு, இராணுவத்தினரின் எண்ணிக்கை, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு இந்தத் தரப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிட்னியைக் களமாகக் கொண்டியங்கும் 'பொருளாதார சமாதான கற்கைகளுக்கான நிறுவனம்' இந்த ஆய்வை முன்னெடுத்துள்ளது. 2008ஆம் ஆண்டு முதல் அதாவது இந்த நிறுவனம் ஆய்வை மேற்கொள்ளத் தொடங்கிய காலம்முதல் ஐஸ்லாந்து முதலிடத்தில் உள்ளது. டென்மார்க் இந்த ஆண்டு இரண்டாவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்கா 157ஆவது இடத்திலும், இந்தியா 152ஆவது இடத்திலும் உள்ளன. ஆப்கானிஸ்தான் 163ஆவது இடத்தில் அதாவது கடைசி இடத்தில் உள்ளது. ஆசிய நாடுகளில் சிங்கப்பூர் 6ஆவது இடத்திலும், ஜப்பான் 9ஆவது இடத்திலும் உள்ளன.

(அ-ம-6)

டொலர்...


என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. ஜூன் மாத இறுதியில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பின் படியே இலங்கையிடம் 3.5 பில்லியன் டொலர் கையிருப்பில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த டொலர் இருப்பில் சீன மக்கள் வங்கியின் 1.4 பில்லியன் டொலர் இடமாற்ற வசதியும் உள்ளடங்கியுள்ளது என்று மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம)

## கோக்குத்தோடுவாயில் மண் மீண்டவை












## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 27 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும்
* பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* சுன்னாகம் சாவகச்சேரி செல்லும் அரச தனியார் பேரூந்துகள் அதிகம் பயணிக்கும் பிரதான வீதி.
* காபற் வீதி முகப்புடன் ஒரு பரப்பு மூன்று இலட்சம் ரூபாய் பின் துண்டுகள் 1 பரப்பு ஒரு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் மட்டும்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.

**தொடர்பு:**

**076 8260 354, 076 0570 354**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நவக்கிரி பகுதியில் 28 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

### நிலப்பரப்பு

- ✓ நவக்கிரி மாணிக்கப் பிள்ளையார் கோயில் வீதியில்.
- ✓ 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✓ 3 வருடம் பூர்த்தி அடைந்த தென்னைகளும் உள்ளன.
- ✓ நிலாவரை வற்றாக் கிணற்றில் இருந்து 1 km தூரம்.
- ✓ நன்னீரூற்றுச் சூழல்
- ✓ 1 பரப்பின் விலை 1200000/= (பன்னிரண்டு இலட்சம்)

**பார்வையிடும் நேரம் :-**

காலை 6.00 மணி தொடக்கம்
மாலை 6.00 மணிவரை.

**தொடர்புகளுக்கு :- ஜெயம்**

**077 81 47 389**
**077 98 65 457**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் வைத்திருந்த நைஜீரியருக்கு மரண தண்டனை

போதைப் பொருள் வைத்திருந்த குற்றத்துக்காக நைஜீரியருக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டுள்ளது. 245 கிராம் ஹொக்கேய்னுடன் அந்த நைஜீரியப் பிரஜை அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார். அவருக்கு எதிரான வழக்கு கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போதே கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி நாமல் பல்லே மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். (ம-6)


## கணினி தட்டெழுத்தாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கணினி தட்டெழுத்தாளர் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**076 573 4507**

## முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்பு

**இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**அடிப்படைத் தகைமைகள்**

- ✓ G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- ✓ 18 - 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக்கோவையை (BIO DATA) கீழ்வரும் Whatsapp இலக்கத்துக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Whats: app 077 756 3781

jenyjude77@yahoo.com


## மரண அறிவித்தல்

மலர்வு 18 . 06 . 2011 — உதிர்வு 05 . 07 . 2023



### இராஜபாஸ்கரன் ஜதுர்சிகன்

**(கிளி / பளை மத்திய கல்லூரியின் - மாணவன் - தரம்: 07)**

துவாரகை A9 வீதி முல்லையடி, பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜபாஸ்கரன் ஜதுர்சிகன் (கிளி / பளை மத்திய கல்லூரியின் மாணவன் - தரம்: 07) நேற்று முன்தினம் (05.07.2023) புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் இராஜபாஸ்கரன் - மோமதி (நிதி உதவியாளர் - நீர்ப்பாசனத் திணைக்களம் - கிளிநொச்சி) தம்பதியரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லையா (கலாபூஷணம்) இராசமணி மற்றும் செல்வராசா பேபிசறோசா தம்பதியரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கரடிப்பள்ளம் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"துவாரகை"
A9, றோட்,
முல்லையடி, பளை.

077 050 3925

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 11 . 10 . 1941 — இறைவன் அடியில் 04 . 07 . 2023



### திருமதி சந்திரமணிதேவி முத்துலிங்கம் (தேவி)

(ஓய்வுபெற்ற அரச தாதி உத்தியோகத்தர்)

யாழ். குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரமணிதேவி முத்துலிங்கம் (ஓய்வு பெற்ற அரச தாதி உத்தியோகத்தர்) தனது 82 ஆவது வயதில் கடந்த (04.07.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல சித்தவைத்தியர் திரு. தியாகராசா (இணுவில் பரிகாரியார்) - திருமதி. தங்கம்மா தம்பதிகளின் ஆசை மகளும், காலஞ்சென்றவர்களான இணுவில் சின்னையா - தங்கச்சியம்மா தம்பதியரின் அருமை மருமகளும், காலஞ்சென்ற திரு. முத்துலிங்கத்தின் (ஓய்வு பெற்ற கமநல சேவைத் திணைக்களப் பிராந்தியப் பணிப்பாளர்) பாசமிகு மனைவியும், திரு. தட்சணாமூர்த்தியின் (நோர்வே) அன்புச் சகோதரியும், கமலாம்பிகையின் (நோர்வே) அன்பு மைத்துனியும், திருமதி. நிறைஞ்சனா சுரேஸ்குமார் (நடன ஆசிரியர், இலண்டன்) திரு. விஜயராகவன் (கணக்காளர், இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திரு.க.சுரேஸ்குமார் (கணக்காளர், இலண்டன்), வைத்தியகலாநிதி (Dr) திருமதி.வி.சஜிதா (இலண்டன்), கிருபாலினி (நோர்வே), ஜனனி (நோர்வே), சயந்தினி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ராகவீணா (இலண்டன்), கைலாஷ் (இலண்டன்), அவினாஷ் (இலண்டன்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தெல்லிப்பழை**
**அரசினர் வைத்தியசாலை முன்ஒழுங்கை,**
**தெல்லிப்பழை.**

(CS/51148)AH-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

நிறைஞ்சனா (லண்டன்): +44 7703 193949
விஜயராகவன் (லண்டன்): +44 7456 939024

## மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 09 . 1943 — இறப்பு 06 . 07 . 2023



### சிவகுரு பத்மநாதன் (சோமண்ணை)

உரும்பிராய் வடக்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு பத்மநாதன் நேற்று (06.07.2023) வியாழக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - அரியமணி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் ராணிமலர் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், முரளிதரன் (ஸ்ரீ மகாமாரி வாணிபம் - உரும்பிராய்) - சுஜாதா, முகுந்தினி - ரவீந்திரன் (கனடா), மோகன் (லண்டன்), உஷாந்தினி ஆகியோரின் அன்பு மாமாவும், சுலக்ஷன், கிருத்திகா, தக்ஷிகா, மிரிஷன், மிதுரன், நிஷானி, மிரோஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கற்பகபிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(CS/51144)AH-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 985 0270**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.